கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் முடிந்த பிறகு எல்லோருடைய பிரச்னைகள் பற்றியும் சுருக்கமாகக் கேட்க நான் அனுமதிக்க இருக்கிறேன். ஆகவே அதற்குள்ளாக அவசரப்பட்டு நம் நிகழ்ச்சி நிரலைத் தவிர்க்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(2) அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

''பேரவையின் 41(3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருட்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்''

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(3) கவன ஈர்ப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புகள்.

திரு. துரை முருகன் : எப்போதும் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கு முன்பு அட்ஜெர்ன்மென்ட் மோஷன்களை எடுத்துக் கொள்வது தான் வழக்கம், ஆகவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சி நிரலில் 42 தீர்மானம் பற்றி எதுவும் சொல்லவில்லை. 41 தீர்மானம் பற்றி தான் சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், நிகழ்ச்சி நிரலில் இருக்கின்றபடி எல்லாவற்றையும் முடித்துவிட்டு, பின்னால் உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற 42 தீர்மானங்களைப்பற்றி முடிந்த அளவுக்கு கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம். 16 தீர்மானங்களின் மீதுள்ள அறிக்கைகளை அச்சடித்து மேஜையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த தீர்மானங்களை கொடுத்தவர்கள் துணைக் கேள்விகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் சுருக்கமாகக் கேட்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். சுருக்கமாக எல்லோரும் பேசினால் பின்னால் உள்ள பிரச்னைகளுக்கு நேரம் கிடைக்கும்.